முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 981

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.06.2022, திங்கட்கிழமை

1. ஓங்கார மகா சூட்சும ராஜனே
ஓங்கார சக்திமிகு குருஅரங்கனே
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி தன்னை
2. ஆசி தன்னை சுபகிருது விடை திங்கள்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 23 ம் நாள், 06.06.2022 திங்கட்கிழமை)
ஆற்றல்பட அரங்கன் வளம்பெற உரைப்பேன்
மாற்றம் செய்து உலகை காக்கவே
மாதவசி அரங்கன் ஞானசேவையை
3. சேவையை கலியுகத்தில் தவம் வரமாகப் பெற்று
செப்பிடுவேன் என் சூட்சுமமாக இயங்கி வர
அவனியோர் அரங்கனை தொடர்பு கொண்டு
ஆனந்தமான வள்ளல் தன்மை நிறைந்த
4. நிறைந்த நல் சன்மார்க்க வழிகளை
நிலவுலகோர் வேதமாக ஏற்று
குறைவின்றி தொடர்ந்து வருதல் காண
குவலயம் ஞான பலம் பெறும்
5. ஞானம் மிக்க ஞானவான்கள் நிறைந்த
ஞானிகள் ஆட்சி உலகில் சடுதி அரங்கேறும்
துணிவுகொண்டு அரங்கன் சக்திவழி
தொடர்ந்து உலகோர் சேவையாற்றி
6. மகிழ்ந்து அரங்கன் தர்மத்தை
மண்ணுலகமெல்லாம் பரப்பிவர
வருகவே அதுவே ஞானமாகும்
வரமென அதன் வழியே உலகோர்க்கு
7. திறம்பட அழியாமை என்கின்ற
தெரிவிப்பேன் ஞானபலம் கூடி
கூடியே அரங்கனால் உலகமாற்றம்
குறையின்றி சடுதி நடந்தேறும்
8. நடந்தேற அரங்கனுள் யானே
நாளும் ஆற்றல் தந்து அரங்கன் வழி
வழிதனில் தீட்சையாக உலகோர்க்கு
வல்லமைபட அருள் புரிந்து வர

9. தெளிவு திடம் ஞானம் பெற
தேசிகனை தேடி உலகோர் வர
வருகவே ஞான ஆட்சிக் காலம்
வல்லமைபட அரங்கன் வழி யானே நடத்துவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–